

# உங்களது எஜமானன் யார்?

சகோதரி. **நிஜா கென்னடி**

ஜனங்களை தேவனுக்கு நேராக வழிநடத்த தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களே ஊழியக்காரர்கள். இஸ்ரவேல் ஜனங்களை எகிப்தியரின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு எடுத்து கானானுக்கு நேராக வழிநடத்த, மோசே தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டான். தேவனை அறியாத மக்கள் தேவனை அறிந்து கொள்ளவும், பாவத்தில் வாழ்கிற மக்களை பாவத்திலிருந்து மனந்திரும்பச் செய்து, தேவனுக்கு நேராக வழி நடத்தவும், தேவன் சிலரை தெரிந்து கொள்கிறார். தேவன், இயேசு கிறிஸ்து வாய் இந்த உலகத்திற்கு வந்து ஊழியம் செய்தார்.

இயேசு கிறிஸ்து நமது பாவங்களுக்காக சிலுவையில் அறையப்பட்டு மரித்து அடக்கம்பண்ணப்பட்டு மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார் (1 கொரிந்தியர் 15 : 3,4). பின் தன்னுடைய சீஷர்களுக்கு தரிசனமாகி அவர்களை நோக்கி :

***நீங்கள் உலகமெங்கும்போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்.***

*- மாற்கு 16 : 15*

என்று கூறினார். பெந்தெகோஸ்தே நாளின்போது, சீஷர்கள் எல்லோரும் கர்த்தருடைய வார்த்தையின்படி ஓரிடத்தில் கூடி, ஒருமனப்பட்டு ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள். அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற சத்தம்போல, வானத்திலிருந்து ஒரு சத்தம் கேட்டது. அச்சத்தம் அவர்கள் இருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. அக்கினிமயமான நாவுகள் அவர்கள் ஒவ்வொருவர்மேலும் அமர்ந்தது. அவர்கள் எவ்லோரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு பல்வேறு மொழிகளில் பேச ஆரம்பித்தார்கள். பழைய ஏற்பாட்டுக் காலத்தில் யோவேல் என்னும் தீர்க்கதரிசி உரைத்த வார்த்தையின்படி நடந்தது.

***என்னுடைய ஊழியக்காரர் மேலும், என்னுடைய ஊழியக்காரிகள் மேலும் அந்நாட்களில் என் ஆவியை ஊற்றுவேன் ; அப்பொழுது அவர்கள் தீர்க்கதரிசனம் சொல்லுவார்கள்.***

*- அப்போஸ்தலர் 2 : 18*

ஆவியானவர் தம் ஊழியத்தை செய்பவர்களுக்கு இப்படிப்பட்டதான வல்லமையைக் கொடுக்கிறார். இன்னும் கர்த்தர் மேல் அதிக வாஞ்சையோடு இருப்பவர்களுக்கு ஆவியின் வரங்களை கொடுத்து ஊழியத்தில் வல்லமையாக பயன்படுத்துவார்.

நாம் எல்லோரும் மனந்திரும்பி, ஞானஸ்நானம் பெற்று, பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று தேவன் வாஞ்சிக்கிறார். தேவன் நாம் பாவத்திலிருந்து மனந்திரும்ப வேண்டும் என்று நம்மை வற்புறுத்தவேமாட்டார். நாமாகவே அவரண்டை வர விரும்புகிறார். நாம் மனந்திரும்பும்போது நம்மை அன்போடு ஏற்றுக்கொள்வார். நம் பாவங்களை மட்டுமல்ல சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாய் இயேசு கிறிஸ்து இருக்கிறார். தம்மண்டை வருகிறவர்களை ஒருபோதும் அவர் கைவிடவே மாட்டார்.

***இந்தச் சிறியரில் ஒருவனையும் அற்பமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் ; அவர்களுக்குரிய தேவதூதர்கள் பரலோகத்திலே என் பரமபிதாவின் சமூகத்தை எப்போதும் தரிசிக்கிறார்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.***

*- மத்தேயு 18 : 10*

இயேசு கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்ட ஒவ்வொரு விசுவாசியும் பரலோகத்தில் கனப்படுத்தப்படுவார்கள். அவர்கள்மேல் தேவன் அக்கரையுள்ளவராயிருக்கிறார். மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும் (லூக்கா 15:7). அப்படிப்பட்டவர்களை நாம் அற்பமாக எண்ணி, அசட்டை

பண்ணி வெறுக்கக் கூடாது. அவர்களை கவனிப்பதற்கும், உதவி செய்வதற்கும் தனியாக தேவதூதர்கள் இருக்கிறார்கள். அத்தூதர்கள் பரலோகத்தில் எப்பொழுதும் பிதாவானவரிடம் நேரடியாக தரிசித்து பேசுகிறார்கள். ஆதலால் நாம் அப்படிப்பட்டவர்களை புறக்கணிக்கக்கூடாது.

*என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிற இந்த சிறியரில் ஒருவனுக்கு இடறல் உண்டாக்குகிறவன் எவனோ, அவனுடைய கழுத்தில் எந்திரக்கல்லைக் கட்டி, சமுத்திரத்தின் ஆழத்திலே அவனை அமிழ்த்துகிறது அவனுக்கு நலமாயிருக்கும்.*

*- மத்தேயு 18 : 6*

தேவனை விசுவாசிக்கிற கர்த்தருடைய பிள்ளைகளை ஏமாற்றி அவர்களுக்கு இடையூறு செய்து, அவர்கள் செய்கிற காரியத்தை செய்ய விடாமல் தடை செய்து, நியாயமாக அவர்களுக்கு வரவேண்டிய நன்மைகளை கொடுக்காமல், காலதாமதத்தை உண்டாக்கி, அவர்களுக்கு எதிராக திட்டங்களை போட்டு அவர்களை வேதனைப்படுத்துகிறவர்கள் தங்களுக்கு தாங்களே தீமையை வருவித்துக் கொள்ளுகிறார்கள். அப்படி அவர்களுக்கு எதிராக பேசி, இருதயத்தை காயப்படுத்தி தீங்கு விளைவிக்கிறவர்கள் தேவனுக்கு எதிராக பாவம் செய்கிறார்கள். உங்களைத் தொடுகிறவன் அவருடைய கண்மணியைத் தொடுகிறான் (சகரியா 2 : 8).

## நீதிமானாக்கும் தேவன்

*தேவன் தெரிந்துகொண்டவர்கள் மேல், குற்றஞ்சாட்டுகிறவன் யார்? தேவனே அவர்களை நீதிமான்களாக்குகிறவர்.*

*- ரோமர் 8 : 33*

தேவன், நம் கடந்தகாலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலத்தைக் கூட அறிந்திருக்கிறபடியால், நம்மில் யாரெல்லாம் தேவனுடைய வழியை தெரிந்து கொள்வோம் என்று அறிந்து அப்படிப்பட்டவர்களை முன் குறித்து, தெரிந்தெடுத்து, நீதிமான்களாக்குகிறார். நீதிமான்கள், தேவனோடு கூட நெருங்கிய உறவில் இருப்பதால், தேவனே அவர்களை ஆளுகை செய்கிறார். அவர்கள் தேவனுடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து நடப்பார்கள். அவர்கள் மேல் ஜனங்கள் குற்றம் கண்டுபிடித்து, அவமானம் செய்து, மதிக்காமல் போகலாம். யார் அவர்கள்மேல் வீணாக குற்றம் சுமத்தினாலும், கர்த்தர் அவர்கள் குற்றம் செய்யவில்லை என்றும், குற்றமற்றவர்கள், உண்மையுள்ளவர்கள் என்றும் தீர்ப்பு செய்து விடுவிப்பார். ஜனங்கள் அவர்களை அவமதித்து வெறுத்தாலும் யாருக்கும் பயப்படமாட்டார்கள்.



ஏனென்றால் கர்த்தர் அவர்களோடு கூட இருக்கிறார். ஜனங்கள் அவர்களுக்கு எதிராக பேசவில்லை, கர்த்தருக்கு எதிராக பேசுகிறார்கள். கர்த்தர் அவர்களிடம் செயல்படுவார், நீதிசெய்வார் என்பதை ஜனங்கள் அறியாததினால் அப்படியாக பேசுகிறார்கள். தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் தொடர்ந்து தேவனையே நோக்கி பார்த்து, அவருக்கு கீழ்ப்படிந்து அன்பில் நிலைத்திருப்பார்கள். கர்த்தர் உங்களுக்காக யுத்தம் செய்வார். நீங்கள் சும்மாயிருப்பீர்கள்.

## ஊழியக்காரரின் ஆசீர்வாதம்

*உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதேபோம் ; உனக்கு விரோதமாய் நியாயத்தில் எழும்பும் எந்த நாவையும் நீ குற்றப்படுத்துவாய் ; இது கர்த்தருடைய ஊழியக்காரரின் சுதந்தரமும், என்னாலுண்டான அவர்களுடைய நீதியுமாயிருக்கிறதென்று கர்த்தர் சொல்லுகிறார்.*

*- ஏசாயா 54 : 17*

கர்த்தருடைய ஊழியத்தை செய்பவர்களுக்கு எதிராக நினைக்கும் நினைவுகளைக் கூட கர்த்தர் அதை ஒன்றுமில்லாமல் போகச் செய்வார். அவர்கள் மேலும் செழித்தோங்கி, முன்னேறி, வெற்றிகரமான ஒரு வாழ்க்கையை வாழ்வார்கள். தேவ மனிதருக்கு விரோதமாக யார் யார் திட்டமிடுகிறார்களோ, அவர்களுடைய தனிப்பட்ட வாழ்க்கையிலோ, அவர்களுடைய குடும்பத்திலோ, அவர்கள் வேலை பார்க்கும் அல்லது வியாபாரம் பண்ணும் ஸ்தலத்திலோ அவர்களது முழு கவனத்தையும் செலுத்தும் படியாக கர்த்தர் ஒரு காரியத்தை வரப்பண்ணுவார். அவர்கள் தேவ பிள்ளைகளைப் பற்றி யோசிக்கக்கூட முடியாதபடிக்கு ஒரு சூழ்நிலையை கர்த்தர் உண்டாக்குவார். சவுல், தாவீதை துரத்தி வருகிறான். அப்படிப்பட்ட சூழ்நிலையில் ஒரு சமயம் தாவீது, சவுல் தன் பின்னால் துரத்தி வருகிறான் என்று நினைத்து போகும்பொழுது, திடீரென்று சவுல், தாவீதுக்கு நேர் எதிராக வந்துவிட்டான். தாவீது கர்த்தரை நோக்கி ஜெபிக்கிறான். அப்பொழுது சவுலின் தேசத்திலிருந்து ஒருவன் சவுலிடம் வேறொரு தேசத்து ராணுவம் அவர்களுக்கு எதிராக வந்திருப்பதாகச் சொல்லுகிறான். உடன்தானே சவுல் தாவீதை துரத்தும் எண்ணத்தை விட்டுவிட்டு தன்னுடைய தேசத்தை நோக்கி செல்லுகிறான். கர்த்தர் செயல் இது (1 சாமுவேல் 23 : 26-28).

தேவமனிதர்களுக்கு எதிராக பேசி, அவர்களை குற்றப்படுத்தினால்,

நாமே குற்றவாளிகள் என்று தீர்க்கப்படுவோம். ஏனென்றால் கர்த்தரே நீதியுள்ள நியாயாதிபதி, நாம் நியாயாதிபதியல்ல. அவர்கள் கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள். அவர்களை எதிர்த்து நின்று பேசுவது, கர்த்தரையே எதிர்த்து நிற்பதுபோல. அவர்களுக்கு எதிராக இருந்து எதையாவது செய்தால் கர்த்தர் நமக்கு நியாயஞ்செய்வார். அப்படி யாரெல்லாம் தேவ மனிதர்களுக்கு எதிர்த்து நிற்கிறார்களோ, அவர்கள் தங்களுக்கு இருக்கின்ற ஆசீர்வாதங்களையும் இழந்து பரிதாப நிலைமையில் இருப்பார்கள். அவர்கள் வெட்கப்பட்டு போகும்படி கர்த்தர் செய்வார்.

தேவனுடைய ஊழியத்தை செய்பவர்களுக்கு விரோதமாக என்ன காரியங்கள் செய்தாலும் அது அவர்களை மேற்கொள்ள முடியாது. அது ஒன்றுமில்லாமல் போய்விடும். அவர்களுக்கு விரோதமாக என்ன பேசினாலும், அது அவர்களுக்கு பாதிப்பை உண்டுபண்ணாது. மேற்கண்ட இரண்டும் தேவனுடைய ஊழியத்தை செய்பவர்களுக்கு தேவனால் அவர்களுக்கு உரிமையாகக் கொடுக்கப்பட்டுள்ளது. இது அவர்களது சுதந்திரம் (அனுபவிக்க கொடுத்த ஆசீர்வாதம்). இது தேவனால் நியமிக்கப்பட்ட ஒரு கட்டளையுமாகும்.

## தேவ ஊழியர்களுக்கு எதிர்த்து நின்றால்?

மோசேயின் சகோதரனான ஆரோன் பிரதான ஆசாரியனாகவும், அவன் சகோதரியாகிய மிரியாம் தீர்க்கதரிசினியாகவும் இருந்தார்கள். இவர்கள் இருவரும் மோசேக்கு எதிராக பேசினார்கள். கர்த்தர் உன்னிடம் மட்டும்தான் பேசுவாரோ? எங்களிடமும் பேசுவார் என்று கூறினர். கர்த்தர் இதைக் கேட்டுக் கொண்டிருந்தார். உடனடியாக கர்த்தர் அவர்களை அழைத்து, உங்களுக்குள்ளே ஒருவன் தீர்க்கதரிசியாயிருந்தால், கர்த்தராகிய நான் தரிசனத்தில் என்னை அவனுக்கு வெளிப்படுத்தி, சொப்பனத்தில் அவனோடே பேசுவேன் (எண்ணாகமம் 12 : 6);



ஆனால் என் தாசனாகிய மோசேயோடே மறைபொருளாக அல்ல, முகமுகமாய் பேசுகிறேன் என்று சொல்லி, மோசேயை எப்படிப்பட்ட உயர்ந்த ஸ்தானத்தில் வைத்திருக்கிறார் என்பதை வெளிப்படுத்தி, நீங்கள் ஏன் எனது ஊழியக்காரனாகிய மோசேக்கு எதிராக பேசத் துணிந்தீர்கள் என்று தேவன் கேட்டார். கர்த்தருடைய கோபம் அவர்கள்மேல் வந்ததால் மிரியாம் குஷ்டரோகியானாள். அப்பொழுதும் கூட மோசே அவர்களை மன்னித்து மிரியாமுக்காக ஜெபித்து தேவனிடமிருந்து சுகத்தை வாங்கித் தருகிறான் (எண்ணாகமம் 12 : 1 -10). ஆதலால் நாம் தேவ மனிதர்களுக்கு எதிராக பேசக்கூடாது. அப்படி நாம் பேசினால் கர்த்தர் அதை கேட்டுக் கொண்டிருக்கிறார். அவர்களுக்கு எதிராக பேசியிருந்தால் தேவனிடம் மன்னிப்பை பெற்றுக் கொள்ள வேண்டும்.

உசியா ராஜா, ஆசாரியர்கள் மட்டுமே செய்ய வேண்டிய வேலையைச் செய்ய துணிந்து தேவாலயத்திற்குள் சென்றான். அதைத் தடுக்கச் சென்ற ஆசாரியர்கள் மேல் கோபம் கொண்டான். அப்பொழுது தேவகோபம் அவன் மேல் வந்தது. அவன் நெற்றியில் குஷ்டரோகம் தோன்றியது.

யெரொபெயாம் ராஜா தூபங்காட்ட (ஆசாரியர் செய்ய வேண்டிய ஊழியம்) பலிபீடத் தண்டையிலே நிற்கையில், தேவனுடைய மனுஷன் வந்து, பலிபீடத்திற்கு எதிராக, கர்த்தர் கட்டளையிட்டபடிஞ“அந்த பலிபீடம் வெடித்து இதிலுள்ள சாம்பல் தரையிலே விழும்” என்றான். யெரொபெயாம் அதைக் கேட்டு, தன் கையை பலிபீடத்திலிருந்து நீட்டி தேவனுடைய மனுஷனை பிடிக்கும்படி கூறினான். கர்த்தருடைய ஊழியக்காரனாகிய தீர்க்கதரிசிக்கு விரோதமாக நீட்டிய அந்தக் கையை திரும்ப மடக்க முடியவில்லை. தேவ மனிதனுக்கு எதிராகப் பேசின ராஜாவின் நிலைமையை பாருங்கள். பலிபீடமும் தூள்தூளாக சிதறி உடைந்து, சாம்பல் தரையில் சிந்தியது. தேவ மனிதன் சொன்ன வார்த்தை, கர்த்தரிடமிருந்துதான் வந்தது என்பதை அப்பொழுது அறிந்து கொண்டான். ராஜாவின் வேண்டுதலின்படி, கையை குணமாக்கும்படி தேவமனிதன் ஜெபித்தான். அப்பொழுது அவனது கை முன்பு போலாயிற்று (1 இராஜாக்கள் 13).

அப்போஸ்தலனாகிய பர்னபாவும் பவுலும் பாப்போ என்னும் பட்டணத்திற்கு வந்தபோது, பர்யேசு என்னும் மனிதனை சந்தித்தனர். அவன் மாயவித்தைக்காரனும், கள்ளதீர்க்கதரிசியுமாயிருந்தான். அவன் செர்கியு பவுல்என்னும் அதிபதியுடனேகூட இருந்தான். செர்கியு பவுல் ஞானமுள்ள

மனுஷனாயிருந்தான். அவன் பர்னபாவையும், சவுலையும் அழைப்பித்து, அவர்களிடத்தில் வேதவசனத்தைக் கேட்க ஆசையாயிருந்தான். பர்யேசு என்னும் மாயவித்தைக்காரன் அதற்கு தடையாயிருந்தான். அதிபதியை விசுவாசத்திலிருந்து திருப்பும்படி, பர்னபாவுக்கும், பவுலுக்கும் எதிர்த்து நின்றான். அப்பொழுது பவுல் பரிசுத்த ஆவியினால் நிறைந்தவனாய் அவனைப் பார்த்து :

*எல்லா கபடமும் எல்லாப் பொல்லாங்கும் நிறைந்தவனே, பிசாசின் மகனே, நீதிக்கெல்லாம் பகைஞனே, கர்த்தருடைய செம்மையான வழிகளைப் புரட்டுவதில் ஓயமாட்டாயோ? இதோ, இப்பொழுதே, கர்த்தருடைய கை உன் மேல் வந்திருக்கிறது, சிலகாலம் சூரியனைக் காணாமல் குருடனாயிருப்பாய் என்றான்.*

*- அப்போஸ்தலர் 13 : 10,11*

அப்போது பர்யேசு பார்வையற்றவனானான். அதிபதி நடந்தவற்றைப் பார்த்து, கர்த்தருடைய உபதேசத்தைக் குறித்து ஆச்சரியப்பட்டு தேவனை விசுவாசித்தான்.

## தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்

*ஆரோனைப் போல தேவனால் அழைக்கப்பட்டாலொழிய, ஒருவனும் இந்த கனமான ஊழியத்துக்குத் தானாய் ஏற்படுகிறதில்லை.*

*- எபிரெயர் 5 : 4*

தேவன், ஆரோனை பிரதான ஆசாரியனாக தெரிந்துகொண்டார். மோசே, இஸ்ரவேலின் பன்னிரெண்டு கோத்திரத்தாரையும், கோத்திரத்திற்கு ஒரு கோல் என்று கொண்டுவரச் சொல்லுகிறான். லேவியின் கோத்திரத்திற்கு ஆரோனின் கோலை கொண்டு வருகிறார்கள். கோல் என்பது ஒரு மரக்கட்டை. அதை பூமியிலே ஊன்றி, தண்ணீர் பாய்ச்சினாலும் அது துளிர்க்காது. ஆனால் இங்கே இந்த பன்னிரெண்டு கோல்களை தேவ சந்நிதியில் சாட்சிப் பெட்டிக்கு முன்பாக ஒருநாளில் வைத்து, மறுநாளில் போய் பார்க்கும்போது, ஆரோனின் கோல் மாத்திரம் துளிர்த்திருந்தது.

*லேவியின் குடும்பத்தாருக்கு இருந்த ஆரோனின் கோல் துளிர்த்திருந்தது; அது துளிர்விட்டு, பூப் பூத்து, வாதுமைப் பழங்களை கொடுத்தது.*

*- எண்ணாகமம் 17 : 8*

இப்படியாக, இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் கர்த்தர் ஆரோனின் கோலை துளிர்க்கச் செய்து, மற்ற அனைத்துக் கோத்திரத்தாருக்கும், கர்த்தர்தான் ஆரோனைத் தெரிந்து கொண்டார் என்பதைக் காண்பித்தார்.

## கர்த்தரை அவமதித்த கோராகு

மோசேயும் ஆரோனும் இருக்கிற மேன்மையான ஸ்தானத்தை (ஆசாரியர்) பார்த்து, கோராகு என்பவன், ஒரு கூட்ட ஜனங்களை தன்னோடு கூட சேர்த்துக்கொண்டு மோசேக்கும், ஆரோனுக்கும் எதிர்த்து நிற்கிறான். நாங்களும் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்தான், நீங்கள் எங்களைவிட மேன்மையானவர்களல்ல என்று பொறாமையினால் எதிர்த்து நிற்கிறான். கோராகும், மோசே, ஆரோனைப் போல லேவி கோத்திரத்தைச் சேர்ந்தவன்தான். ஆனால் முழு இஸ்ரவேல் ஜனத்தையும் வழிநடத்த மோசேயையும், ஆரோனையும்தான் தேவன் தெரிந்தெடுத்தார். அதை அந்த கோராகு அறியாமல் போனான். அவன் ஆரோனையும், மோசேயையும் பார்த்தானேயொழிய அவர்களுக்கு மேலாக இருக்கும் தேவனை மறந்து போனான். எவ்வளவு ஜனங்கள் இருந்தாலும் ஒரு சிலரை மாத்திரம் தேவன் தமக்கென தெரிந்தெடுக்கிறார். கோராகும் அவன் கூட்டமும் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களை எதிர்த்து நிற்பதன் மூலம் தேவனையே எதிர்த்து நிற்கிறார்கள். அந்த கூட்டத்தாரில் தாத்தானும், அபிராமும் மோசேக்கு எதிராக குற்றஞ்சாட்டினார்கள். மோசே, கோராகையும், அவன் கூட்டத்தாரையும், கர்த்தருடைய சந்நிதியில் கூடி வரச்செய்தான். ஆனால், கோராகோ சபையார் எல்லோரையும் மோசேக்கும், ஆரோனுக்கும் விரோதமாக கூடச் செய்தான். கர்த்தருடைய மகிமையை சபையார் எல்லோரும் கண்டார்கள். மோசே, சபையாரிடம் கோராகு, தாத்தான், அபிராம் என்பவர்களைவிட்டு விலகிப்போகும்படி சொல்லி, கர்த்தர்தான் தன்னை அனுப்பினார் என்பதற்கு அடையாளமாக, இந்த மனிதர்கள், எல்லா மனிதரும் சாகும்படி மரித்தால், கர்த்தர் தன்னை அனுப்பவில்லை என்றும், இவர்கள் அசாதாரணமாக மரித்தால் கர்த்தர் தன்னை அனுப்பினார் என்றும் அறிந்துகொள்வீர்கள்; பூமி பிளந்து அவர்களை விழுங்கிவிடும் என்றும் இதன் மூலம் இவர்கள் கர்த்தரை அவமதித்தார்கள் என்பதையும் அறிந்து கொள்வீர்கள் என்றான். மோசே இவற்றைச் சொல்லி முடித்ததும் அவர்கள் நின்ற இடத்தில் பூமி பிளந்தது, கோராகும் அவன் கூட்டத்தாரும் அந்த பிளப்பிலே விழுந்து மரித்துப் போனார்கள். இதன் மூலம் கர்த்தர் மோசேயையும், ஆரோனையும் தாமே தெரிந்துகொண்டார் என்பதை அசாதாரண முறையில் வெளிப்படுத்தினார்.

தேவன் தெரிந்துகொண்டவர்களுக்கு எதிராக நாம் பேசக்கூடாது. அப்படி நாம் பேசினால் தேவனுடைய நியாயத் தீர்ப்பும், தண்டனையும் வரும். அவர்களுக்கு எதிராக இருக்கும் ஜனங்களோடும் சேரக்கூடாது. தொடர்ந்து நாம் அவர்களுக்கு எதிர்த்து நிற்கும்போது, இமைப்பொழுது தேவன் நம்மைவிட்டு விலகுவார். அப்போது இதுவரை எல்லாவித ஆபத்துகளிலிருந்தும், கஷ்டங்களிலிருந்தும் பாதுகாத்துவந்த தேவனுடைய பாதுகாவல் நமக்கு இல்லாதுபோகும். அப்பொழுது, குடும்பங்களிலும், வேலை ஸ்தலங்களிலும் சூறாவளி வீசும்; இதுவரை கிடைத்துவந்த மனுஷ தயவு நீங்கிப்போகும்; நன்மை, தீமையாக மாறும்; நிம்மதிபோகும். சமாதானத்தைத்தேடி, பாலைவனத்திலே தாகத்துக்கு தண்ணீர்வேண்டி அலைபவனைப்போல, அலைந்துதிரியும்படியாக இருக்கும். அதனால் ஒருபோதும் சமாதானத்தின் தேவனுக்கு எதிர்த்து நிற்காதீர்கள். இந்த தேவன் கொடுக்கும் சமாதானத்தையே, நற்செய்தியாய் உலகமெங்கும் போய் அறிவிக்கிறவர்கள், தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட தேவனுடைய ஊழியக்காரர்கள்.

தேவனது தெரிந்து கொள்ளுதல் மிகவும் மேன்மையானது. தேவனின் இரக்கமுள்ள குணத்தையும் இந்த தெரிந்து கொள்ளுதலில் காணலாம். தேவன் அழைக்காமல், நாமே முன்வந்து இந்த ஊழியத்தை செய்ய முடியாது. வேதம் முழுவதையும் வாசித்து பார்த்தோமென்றால், தேவன் தம்முடைய ஊழியக்காரர்களை தேவனுடைய மனுஷனாகிய மோசே, தேவனுடைய மனுஷனாகிய தாவீது என்று குறிப்பிட்டிருப்பதை நாம் காணலாம். அழைக்கப்பட்டவர்களோ அநேகர், தெரிந்து கொள்ளப்பட்டவர்களோ சிலர். எல்லா ஜனங்களும் அவருடைய சிருஷ்டிப்புதான். யார் மனந்திரும்பி, இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் தங்கள் பாவங்கள் கழுவப்பட்டு சுத்திகரிக்கப்படுகிறார்களோ, அவர்கள் அவருடைய பிள்ளைகளாகிறார்கள். இவர்களில் சிலரை ஆசாரியராகவும், ராஜாக்களாகவும் தெரிந்து கொள்கிறார்.

நாம் சொந்த வாழ்க்கையை வாழ்ந்துகொண்டு, சமயம் கிடைக்கும்போது அல்லது எப்போதாவது கர்த்தரைப்பற்றி மற்றவர்களுக்கு சொல்வது வேறு. கர்த்தருக்காகவே தன்னை முழுமையாக அர்ப்பணித்து, அவருக்காகவே வாழ்வது வேறு. மோசே, ஆரோன் இவர்களைப் பற்றிய காரியங்கள் எல்லாம் பழைய ஏற்பாட்டு காலத்தில் நடந்தது என்று நாம் நினைக்கலாம். புதிய ஏற்பாட்டு காலத்திலும்கூட முழு நேர ஊழியத்திற்கென்று (முழுமையாக தங்கள் வாழ்க்கையை ஊழியத்திற்கென்று



அர்ப்பணிப்பது) சிலரை கர்த்தர் பிரித்தெடுக்கிறார். அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர்கள், மேய்ப்பர்கள், போதகர்கள் என்று ஐந்து வகை ஊழியங்களாக (எபேசியர் 4 : 13) கர்த்தர் வைத்துள்ளார்.

இன்றைக்கு ஒரு மனிதனை, மனுஷியை, அவர்கள் இருக்கும் பதவியை வைத்தும், வேலை செய்யும் ஸ்தலத்தை வைத்தும், வாங்கும் சம்பளத்தை வைத்தும் இந்த உலக மனிதர்கள் மேன்மையாக பார்க்கிறார்கள். ஆனால் கர்த்தருக்கென்று தன்னை முழுமையாக அர்ப்பணித்து ஊழியம் செய்பவர்களை, கர்த்தரால் கர்த்தருக்கென்று தெரிந்து கொள்ளப்பட்டவர்களை இழிவாகப் பார்க்கிறார்கள். அவர்களது எஜமானன் பரலோகத்தையும், பூலோகத்தையும் உண்டாக்கினவர் ; சகலத்தையும் உண்டாக்கினவர், இவர்களையும் உண்டாக்கினவர்.

அப்போஸ்தலனாகிய பவுல் சொன்னதுபோல, கர்த்தருடைய ஊழியக்காரர்களை இரட்டத்தனையாகக் கனம் பண்ணுவோம். அதற்கான ஆசீர்வாதத்தைக் கர்த்தரிடத்திலிருந்து பெற்றுக்கொள்வோம். கர்த்தருடைய ஊழியக்காரர்களுக்கு ஒரு கலசம் தண்ணீர் கொடுத்தாலும் நம்மை ஆசீர்வதிப்பேன் என்று கர்த்தர் சொல்லியிருக்கிறார்.

கர்த்தருடைய கிருபை உங்களோடு கூட இருப்பதாக!

**உங்கள் சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?**

இந்தப் பத்திரிக்கை வேண்டுவோர் சந்தா அனுப்பி பெற்றுக் கொள்ளவும்.

உள்நாட்டு வருட சந்தா ரூ. 200/-

வெளிநாட்டு வருட சந்தா ரூ. 2000/-

*S. PAULRAJ KENNEDY என்ற பெயருக்கு DD / M.O / Cheque மூலம் அனுப்பவும். உங்களது முழு முகவரியையும் எழுதுங்கள். ICICI வங்கி வாயிலாகவும் நீங்கள் அனுப்பலாம்.*

ICICI வங்கி கணக்கின் பெயர் : S. PAULRAJ KENNEDY

ICICI வங்கி கணக்கு எண் : 0350 0150 7744

**எங்களது முகவரி**

எஸ். பால்ராஜ் கென்னடி, ஏ-1, டேஜு பிளாஸா, 2, தெற்கு அவென்யூ, ஸ்ரீநகர் காலனி, சைதாப்பேட்டை, சென்னை - 600 015. தமிழ்நாடு. இந்தியா.

*உங்களது ஜெப தேவைக்கும், தேவ ஆலோசனைக்கும்*

**+91 - 99406 67881, +91 - 44 - 22353500**

**E-mail : nijakennedy@yahoo.com**

*இணையதளம் :* **www.kennedyministries.org**




www.leadworship.com

- இசையைக் காட்டிலும் மேலானது இயேசு கிறிஸ்துவுக்கு பின்னால் செல்வது.
- இயேசு கிறிஸ்துவுக்காக வாழ்வதினால் கிடைப்பதுவே இசை.
- பாடல் என்பது என்ன? கலாச்சாரத்தை, தலைமுறைகளை, மொழியை இன்னொரு பரிமாணத்துக்கு உயர்த்தும் வல்லமை பாட்டில் உண்டு. ஒரு உடைந்த உள்ளத்தை குணப்படுத்தும். அன்பிற்கு சத்தம் கொடுப்பது பாடலே. வார்த்தைகளை அசாதாரணமாக உயர்த்துவது பாடல்களே. தேவனுடைய பிரசன்னத்திற்குள் நம்மை கொண்டு செல்லும் தெய்வீக வெளிப்பாடு பாடலில் உண்டு. இவையெல்லாம் பால் பலோக்கி தன் ஆராதனையின் பலனே என்கிறார்.
- பால் பலோக்கியின் ஆராதனை, அநேக பாடல்களை இந்தத் தலைமுறையினருக்குக் கொடுத்துள்ளது.
- 90-களில் சின்ன, சின்ன இடங்களில் (அமெரிக்காவின் நியூ ஜெர்ஸி நகரில்) ஆரம்பித்த பால் பலோக்கியின் இசைப் பயணம் இன்று அமெரிக்காவிலுள்ள டெக்ஸாஸில் லின்டேல் என்னும் இடத்தில் சமுதாய கிறிஸ்தவ ஐக்கியத்தின் ஆராதனையை தலைமையேற்று நடத்தும் ஒரு தலைவனாக உயர்த்தியுள்ளது.
- பாடல்கள், நமது சொந்த வாழ்க்கை பயணத்தின் எல்லைக்குறிகளாகப் பயன்படுகின்றன.
- பால் பலோக்கியின் பாடல்கள் மீதுள்ள வாஞ்சையை அவரது எழுத்தை வைத்து நாம் அறிந்து கொள்ளலாம். நம்மை ஈர்க்கும் அவரது பாடல்கள், தனிப்பட்ட ஒரு மனிதனின் ஆராதனையிலிருந்து இன்று உலக அளவில் சபைகளில் ஆராதிக்கும் அளவிற்கு உயர்ந்துள்ளது.
- ஒரு ஆராதனைப்பாடலைஎழுதுபவரின் முக்கியமான பொறுப்பு, சமுதாயத்தின் ஒருங்கிணைப்பை ஒவ்வொரு மனுஷனுக்குள்ளும் ஏற்படுத்துவதாக இருக்க வேண்டும் என்கிறார் பால் பலோக்கி.



- ஜனங்களை ஒரு ஐக்கியத்திற்குள்ளாகக் கூட்டிக்கொண்டு வருவதற்கும், சேர்ந்திருந்து தேவனை நோக்கி ஜெபிப்பதற்கும், நாங்கள் பாடல்களை ஒரு கருவியாகப் பயன்படுத்துகிறோம் என்கிறார் பால்.
- ஜனங்களின் மீது இவர் கொண்டுள்ள பற்று, அநேக வல்லமையான ஆராதனைப் பாடல்களைக் கொண்டு வந்துள்ளது. "என் மனக்கண்களைத் திறந்தருளும்" ("Open the Eyes of My Heart") "எல்லாவற்றுக்கும் மேல்" ("Above All") *(லென்னி லீ பிளாங்க் என்பவரும் சேர்ந்து எழுதியது)* இந்த இரண்டு பாடல்களும் இவர் எழுதி இசையமைத்த பிரபலமான பாடல்களாகும்.
- இவர் தனது தனிப்பட்ட பொறுப்புகளோடு, மைக்கேல் ஸ்மித், பிரன்டன் ப்ரௌன், லின்கன் புருஸ்டர் போன்றோருடன் சேர்ந்து அநேகப் பாடல்களை எழுதியுள்ளார்.
- பால் பலோக்கி, இசையில் புதுவிதமான பாணிகளைக் கையாண்டாலும், எழுதுவதில் நேரிடையாக அணுகுவதையே கடைபிடிக்கிறார்.
- எளிமையாக, அதே சமயம் ஆர்வத்தை ஏற்படுத்தும்படியாக இருக்க வேண்டும் என்பதை என் கவனத்தில் வைத்திருப்பேன் என்கிறார் தன்னுடைய பாடல்களை தான் எழுதும்போது. முழு வேதாகமத்தையும் ஒரே பாடலில் சொல்லத் தேவையில்லை. அப்படி செய்யவும் முடியாது என்கிறார். கர்த்தரின் ஒரு குணாதிசயத்தை ஒரு பாடலில்எடுத்துக்கொள்வேன் என்கிறார். அதை முக்கியப்படுத்தி, வெளிச்சத்திற்குக் கொண்டு வருவேன் என்கிறார் பால் பலோக்கி. இன்று அநேக ஆராதனை வீரர்களுக்கு பயிற்சி கொடுக்கிறார்.
- சேர்ந்திருந்து கர்த்தரைத் துதிப்பதன் அவசியத்தை பால் உணர்ந்திருக்கிறார். அவர் சொல்லுகிறார் : நாம் ஒருவருக்கொருவர் தேவை. நாம் ஆராதிப்பது அவசியம். வாழ்க்கையின் மையம், தேவனோடு நாம் கொண்டுள்ள உறவும், மற்ற மனிதர்களோடுள்ள உறவுமே. பாடல்களை எழுதுவதும், கர்த்தருடையவார்த்தையோடு சேர்ந்து நாம் ஒன்றை உருவாக்குபவராக முயற்சி செய்வதும், நம்முடைய பிரார்த்தனைகளை பாடல்களாக நாமாகவேப் பாடுவதும், நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்காகவே. மேலும், இதிலிருந்து நல்லதொரு பாடல் வந்தால் அது பரிசு.
- பால் பலோக்கி, இசையமைக்கும்போது பியானோவையும், கிடாரையும் பயன்படுத்துகிறார். ஆராதனையை முன்நின்று நடத்தும் பொழுது கிடாரை பயன்படுத்துவதையே விரும்புகிறார்.

# கேட்கிறதைக் கவனியுங்கள் ③

*தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்த பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது.*

*- எபிரெயர் 4 : 12*

தேவனுடைய வார்த்தையை, இரவும் பகலும் நீங்கள் தியானிக்க, தியானிக்க (தேவனுடைய வார்த்தைகளை உங்களது ஞாபகத்திற்குக் கொண்டு வந்து, அதை இன்னுமாகப் புரிந்துகொள்ள முயற்சி செய்வது) உங்களுக்குள்ளே வரங்கள் செயல்பட ஆரம்பிக்கும். முதலாவது, நீங்கள் யோசிக்கிறக் காரியங்களை, உங்களுக்குள் வரும் நினைவுகளை, சரிதானா? அல்லது தவறானாதா? என்று நிறுத்துப் பார்க்க ஆரம்பிப்பீர்கள் . தங்கத்தை தராசில் வைத்து துல்லியமாக எடைபோடுவதுபோல உங்கள் நினைவுகளையும் யோசனைகளையும் எடைபோட்டு பார்ப்பீர்கள். இங்கே தராசுக் கல் தேவனுடைய வார்த்தையே. நீங்கள் வேதத்தைப் படிக்க, படிக்க அந்த வார்த்தை, உங்களது அறிவுக்கும், ஞானத்திற்கும், புரிந்துகொள்ளும் திறனுக்கும் அப்பாற்பட்டு உங்களது இருதயத்திற்குள் சென்று இந்த வரத்தை (1 கொரிந்தியர் 12 : 8) உங்களுக்குத் தரும். "அறிவை உணர்த்தும் வசனம்" என்னும் வரத்தின் செயல்பாடே இது. ஆனால், மிகவும் முக்கியமானது பரிசுத்த ஆவியின் அபிஷேகம். அபிஷேகம் இல்லாமல் வேதத்தைப் படிப்பது ஒன்றுக்கும் பிரயோஜனமில்லை. முதலாவது பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை கர்த்தரிடத்திலிருந்து கேட்டு பெற்றுக் கொள்ளுங்கள் (லூக்கா 11:13). அந்த அபிஷேகம், உங்களுக்கு சகலவற்றையும் போதிக்கும் (1 யோவான் 2 : 27). முதலாவது உங்களை நீங்களே எடைபோட்டு பார்த்து நிதானிப்பீர்கள். அடுத்தது, மற்றவர்களின் பேச்சு, நடத்தை இவற்றையெல்லாம் உங்கள் கண்களால் பார்த்தாலும், காதால் கேட்டாலும், அவற்றுக்கெல்லாம் அப்பாற்பட்டு அவர்களது பேச்சிற்கும், செயலுக்கும் உற்பத்தி ஸ்தலமான அவர்களது எண்ணங்களையும், யோசனைகளையும் அறிந்துகொள்வீர்கள். இப்படியாகத் தொடர்ந்து நீங்கள் வேதத்தைப் படித்து, அதோடு விட்டுவிடாமல் அதை உங்களது ஞாபகத்திலே வைத்து யோசித்துப் பார்ப்பீர்களென்றால், கர்த்தருடைய ஆவியானவர் உங்களுக்குள்ளாக அவற்றைப் பற்றிய சரியான, ஆம், மிகச் சரியான விளக்கத்தை ஒரு யோசனையைத் தருவதுபோலத் தருவார். கர்த்தர்தான் அந்த வெளிச்சத்தைத் தருகிறார் என்ற நிச்சயமும் உங்களுக்குள்ளே உண்டாகும். கர்த்தருடைய ஆவியானவர் தந்ததே என்பதற்கு அதுவே அடையாளம். எந்த சந்தேகமும் இருக்காது. இதுதான் நமக்கு மிக, மிக அத்தியாவசியம். எது? கர்த்தரோடுகூட உள்ள ஐக்கியம், முதலாவது வேதத்தைப் படிக்க வேண்டும். இரண்டாவது, அந்த வார்த்தைகளோடு ஜெபத்திற்குள் பிரவேசிக்க வேண்டும். ஜெபத்திலே, கர்த்தருடைய ஆவியானவர் நம் உள்ளத்திலே யோசனைகளையும், எண்ணங்களையும் (இதுவே அமர்ந்த மெல்லிய சத்தம் என்பது) தருவதற்கும், அமைதியாகக் காத்திருக்க வேண்டும். உங்களது கவனம் சிதைவது போல இருந்தால், கல்வாரி சிலுவையை நினைத்துப் பாருங்கள். நமக்காக இரத்தம் சிந்தின அன்பின் தெய்வம் இயேசு கிறிஸ்துவை, இன்னதுதான் உருவம் என்று சொல்ல முடியாதபடி ஒரு ஆட்டை அடித்து போட்டதுபோல, சரீரத்தை பிய்த்து போட்டு, இரத்தம் சிந்த சிலுவையில் தொங்கும் இயேசு கிறிஸ்துவை உங்கள் மனதிலே ஞாபகத்திற்குக் கொண்டு வாருங்கள். அந்த அன்பை இப்பொழுது நினைத்துப் பார்ப்பீர்கள் உங்களது இருதயம் அவர்மேல் உள்ள அன்பால் நிரம்பும். உங்களுக்கு நன்கு தெரிந்த, பிடித்தமானப் பாடலை பாடுங்கள். நீங்கள் பாடுவதைக் காட்டிலும், பரிசுத்த ஆவியானவர் உங்களது உள்ளத்திலே தரும் வெளிச்சத்தை எதிர்பார்த்தே இருக்க வேண்டும். நீங்கள் பாடும்பொழுதே கர்த்தருடைய ஆவியானவர் உங்கள் இருதயத்திலே உணர்த்துவார் அல்லது பாடி முடித்தபிறகு உணர்த்துவார். உங்களது எதிர்பார்ப்பு (Expectation) மிக மிக முக்கியம். இந்த காரியம், உங்களது கவனிக்கும் திறனை அதிகரிக்கும். கர்த்தருடைய ஆவியானவர் உங்களோடு இடைபட இடைபட உங்களது அபிஷேகம் பெருகும்.

- தொடரும்